## ஆய் ஜநந்யாசார்யர்

## வாழி திருநாமம்

ஓங்கு துலா பூராடத்து உதித்த செல்வன் வாழியே
ஒண்மதியோன் எதிராசன் ஒண்சரணோன் வாழியே
பாங்குடனே ஞானப் பிரான் பணியுமவன் வாழியே
பஞ்சமத்தின் பொருள் தன்னைப் பரிந்துரைத்தோன் வாழியே
தேங்கு புகழ் தேவராசர் திருவருளோன் வாழியே
தென்மறையின் மனப் பொருளைத் தெளிவித்தான் வாழியே
தாங்கு திருக்கை திரிதண்டம் தரித்த வள்ளல் வாழியே
திருத்தாழ்வரை தாதர் திருவடிகள் வாழியே

---